**மாநிலத் திட்ட இயக்கம், சென்னை-600 006**

**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி**

**மாநிலத் திட்ட இயக்குநரின் செயல்முறைகள்**

**ந.க.எண்.** 1342/A11/பமேகு/ஒபக/2024, நாள்22/07/2024

**பொருள்:** ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு நிகழ்வுகள் (2024-2026) – **பெற்றோர் விழிப்புணர்வுக் கூட்டம்** நடத்துதல் – வழிகாட்டுதல்கள் – சார்பு.

**பார்வை:**

1) அரசாணை (நிலை) எண்.144, நாள்: 28.06.2024, பள்ளிக் கல்வித் (அகஇ2) துறை.

2) ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநிலத் திட்ட இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.1342/A11/பமேகு/ஒபக/2024, நாள்.12.07.2024

3) ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநிலத் திட்ட இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.1342/A11/பமேகு/ஒபக/2024, நாள்.16.07.2024

*** *** ***

பார்வை-2இல் காணும் 16/07/2024 செயல்முறைகளின்படி **02.08.2024, வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி முதல் 01.00 மணி வரை பள்ளி மேலாண்மைக் குழு சார்ந்து பெற்றோர்களுக்கான விழிப்புணர்வு கூட்டத்தினை** அனைத்து வகை அரசுப் பள்ளிகளிலும் கீழ்க்காண் வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி நடத்திட பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்திடுமாறு முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## வழிகாட்டுதல்கள்:

### அ) பெற்றோர்களுக்கு தகவல் தெரிவிக்கும் முறை

1. பெற்றோர் விழிப்புணர்வுக் கூட்டத்திற்கான அழைப்பிதழை பள்ளியில் பயிலும் குழந்தைகள் மூலம் பெற்றோர்களுக்கு ஒரு வாரத்திற்கு முன்பிருந்தே அனுப்பிவைக்க வேண்டும்.

2. பள்ளியளவில் உள்ள புலனக் குழுக்கள் (வாட்ஸ்-அப்) மற்றும் தொலைபேசி வாயிலாக பெற்றோர்களுக்கு கூட்டம் குறித்த தகவல் தெரிவிக்க வேண்டும்.

3. தற்போதைய பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் மூலமாக அனைத்துப் பெற்றோர்களுக்கும் தகவல் தெரிவிக்க கேட்டுக்கொள்ள வேண்டும்.

**ஆ) கூட்டத்திற்கான முன்னேற்பாடுகள்**

1. விழிப்புணர்வுக் கூட்டத்தில் பங்கேற்க வரும் பெற்றோர்கள் அனைவரும் அமரும் வகையில் போதிய இருக்கைகள் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும்.
2. கூட்டத்திற்கான ஒலிபெருக்கி வசதிகள், திரையிட வசதியாக LCD Projector, Audio System தயார் நிலையில் இருக்க வேண்டும்.
3. பள்ளியில் போதிய சுகாதாரமான குடிநீர் வசதிகள் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும்.
4. சுகாதாரமான கழிப்பறை வசதிகள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.
5. பள்ளியில் பணியாற்றும் அனைத்து ஆசிரியர்களும் பெற்றோர் கூட்டத்தில் கலந்து கொள்வதை பள்ளித் தலைமையாசிரியர்கள் உறுதிசெய்ய வேண்டும்.
6. சார்ந்த பள்ளியின் ஆசிரியர்கள் மற்றும் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுடன் முன்திட்டமிடல் கூட்டத்தை நடத்திப் பணிகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.
7. பெற்றோர்களின் வருகைப் பதிவை பள்ளியின் அனைத்து ஆசிரியர்கள் துணையோடு மேற்கொள்ள வேண்டும்.
8. பெற்றோர் வருகை குறித்த எண்ணிக்கையினை அறிந்துகொள்ள ஏதுவாகத் தகவலைப் பெற்றோர் செயலியில் அன்றைய நாளே பதிவேற்றம் செய்யவேண்டும்.

**பெற்றோர் விழிப்புணர்வுக் கூட்டம் – எவ்வாறு நடத்தப்பட வேண்டும்?**

1. பெற்றோர் விழிப்புணர்வுக் கூட்டமானது தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்க வேண்டும்.
2. பெற்றோர் அனைவரையும் தலைமையாசிரியர் வரவேற்றுக் கூட்டத்திற்கான நோக்கத்தை விளக்கமாகக் கூற வேண்டும்.

3. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு கல்வியமைச்சர் ஆகியோரின் பள்ளி மேலாண்மைக் குழு குறித்தான வாழ்த்துச் செய்தி காணொளிகளைத் திரையிட வேண்டும்.

4. பள்ளி மேலாண்மைக் குழு ஆசிரியர் பிரதிநிதி பள்ளி மேலாண்மைக் குழு மற்றும் அதன் முக்கியப் பணிகள் குறித்துச் சுருக்கமாக எடுத்துக் கூற வேண்டும்.

5. கடந்த இரண்டாண்டுகளாக (2022-2024) பள்ளி மேலாண்மைக் குழு மேற்கொண்ட பணிகள் குறித்துப் பள்ளி மேலாண்மைக் குழுத் தலைவர் கூட்டத்தில் எடுத்துரைக்க தலைமையாசிரியரட கேட்டுக்கொள்ள வேண்டும். குறிப்பாக,

   i. எத்தனை கூட்டங்கள் நடைபெற்றன?

   ii. எத்தனை தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன?

   iii. எத்தனை தீர்மானங்களுக்கு தீர்வு காணப்பட்டன?

   iv. எத்தனை தீர்மானங்கள் நிலுவையில் உள்ளன?

போன்ற தகவல்களைப் பெற்றோர்களிடையே பகிர்ந்துகொள்ள வேண்டும். மேலும், ஜூன் 30 வரை மாநில அளவில் 3,84,982 தீர்மானங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதையும், அதில் 87,665 தீர்மானங்களுக்குத் தீர்வு கிடைத்துள்ளது என்ற செய்தியையும் பகிர்ந்துகொள்ள வேண்டும்.

6. பள்ளி மேலாண்மைக் குழுத் தலைவரின் அறிக்கைப் பகிர்வினைத் தொடர்ந்து 2022 முதல் 2024 வரை இரண்டாண்டுகள் பணியை சிறப்பாக நிறைவு செய்தமைக்காகப் தற்போதைய பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவிக்கும் பாராட்டு நிகழ்வை தலைமையாசிரியர் முன்னின்று நடத்த வேண்டும். பாராட்டு நிகழ்வின்போது தலைவர், துணைத் தலைவர், கல்வியாளர் மற்றும் உறுப்பினர்கள் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள அழைக்கலாம்.

7. தொடர்ந்து பார்வை-1இல் காண் அரசாணையில் சொல்லப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றிப் பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு மற்றும் புதிய உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் நிகழ்வுகள் குறித்துத் தலைமையாசிரியர் அல்லது ஆசிரியர் பிரதிநிதி பெற்றோர்களிடையேத் தெளிவாகப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

8. தொடர்ந்து, பெற்றோருக்கு எழும் சந்தேகங்கள், கேள்விகளுக்கு உரிய முறையில் விளக்கம் அளித்து மறுகட்டமைப்பு நிகழ்வில் அனைவரும் கலந்து கொள்ள அழைப்பு விடுக்க வேண்டும்.

9. இறுதியாக, கூட்டத்தில் கலந்துகொண்ட பெற்றோர்கள் அனைவருக்கும் தலைமையாசிரியர் நன்றி கூறி கூட்டத்தைத் தேசிய கீதத்துடன் நிறைவு செய்ய வேண்டும்.

## பள்ளி மேலாண்மைக் குழு பெற்றோர் விழிப்புணர்வுக் கூட்டம்
## உத்தேச நிகழ்ச்சி நிரல்

- தமிழ்த்தாய் வாழ்த்து
- வரவேற்புரை மற்றும் கூட்டத்தின் நோக்கம்
- மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு கல்வியமைச்சர் ஆகியோரின் வாழ்த்துச் செய்தி காணொளிகள் திரையிடல்
- பள்ளி மேலாண்மைக் குழு மற்றும் அதன் பணிகள் - பகிர்வு
- பள்ளி மேலாண்மைக் குழுவின் இரண்டாண்டு பணிகள் அறிக்கை வாசிப்பு
- பணி நிறைவு செய்த உறுப்பினர்களுக்கு பாராட்டும் வாழ்த்தும்
- அரசாணை வழிகாட்டு நெறிமுறை - மறுகட்டமைப்பு மற்றும் உறுப்பினர்கள் தெரிவு செய்யும் முறை – காணொளி திரையிடல்
- கேள்வியும் பதிலும்
- நன்றியுரை
- தேசிய கீதம்

**மாநிலத் திட்ட இயக்குநருக்காக**

பெறுநர்: (1) **மாவட்ட ஆட்சியர்கள்**

(2) **முதன்மைக் கல்வி அலுவலர்கள்**
அனைத்து மாவட்டங்கள்